**தேனி மாவட்டம்**
**கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளவும், பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்.**
******

தேனி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு பணிகள் குறித்து, அனைத்துத்துறை அரசு அலுலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் இன்று (16.03.2020) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டில் கொரோனா பாதிப்பு இல்லை என்றபோதிலும், அண்டை மாநிலங்களிலிருந்து இந்நோய் பரவாமல் தடுப்பதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள அறிவுறுத்தியுள்ளதை தொடர்ந்து, தேனி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளவும், பொதுமக்களிடையே விழிப்புணர்வு பணிகளை அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும்

அதன்படி, நமது மாவட்டம் கேரள மாநிலத்தின் அருகில் எல்லைப்பகுதிகளாக அமைந்துள்ளதால், தேனி மாவட்டத்தில் கொரோனா பரவாமல் தடுப்பதற்காக மாவட்ட எல்லையில் கண்காணிப்பு சோதனைச் சாவடிகள் மற்றும் நோய் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளவும், அனைத்து உள்ளாட்சி பகுதிகளிலும் போர்க்கால அடிப்படையில் தூய்மைப்படுத்தும் பணிகளை சுகாதாரம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை, உள்ளாட்சி துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும்.

மேலும், மாவட்டத்தில் அனைத்துப்பகுதிகளிலும் உள்ள திரையரங்குகளும் மற்றும் தேனி ஊராட்சி ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் Fun Park (சிறுவர் பூங்கா)வினையும் 31.03.2020 வரை மூடப்பட்டுள்ளதை சம்பந்தப்பட்ட வருவாய் கோட்டாட்சியர்கள் கண்காணித்திட வேண்டும். அதனைப்போன்று, அனைத்துப்பகுதிகளில் உள்ள உடற்பயிற்சி கூடங்களையும் 31.03.2020 வரை மூடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து திருமண மண்டபங்களில் திருமண நிகழ்ச்சியினை தவிர, மற்ற நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்க கூடாது என்பதையும், திருமண நிகழ்ச்சிகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே நபர்கள் கலந்து கொள்ள அனுமதித்திட வேண்டும் என்ற நிபந்தனையும் திருமண வீட்டார்களுக்கு முன்கூட்டியே மண்டப உரிமையாளர்கள் தெரிவித்திட வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளுக்குட்பட்ட சமுதாயக் கூடங்களிலும் தேவையற்ற நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான அனுமதியை தவிர்த்திட வேண்டும்.

பொது மக்கள் அதிகளவில் கூடும் இடங்களில் ஒன்றான வார சந்தை மற்றும் உழவர் சந்தைகளில் பொதுமக்கள் அதிக நேரம் செலவிடமால், விரைந்து செல்லுவதற்கும் மற்றும் சுத்தத்தினை கடைபிடிப்பதற்காக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, கை கழுவும் முறை குறித்த செயல் விளக்கங்கள், துண்டு பிரசுரங்கள் உள்ளிட்டவைகள் வழங்கியும், தண்ணீர் தொட்டி, சோப்புகள் உள்ளிட்டவைகளை மேற்கண்ட இடங்களில் நிறுவி, விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னணு வீடியோ வாகனத்தின் மூலம் கொரோனா வைரஸ் தொடர்பான விழிப்புணர்வு குறும்படங்களை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமம் மற்றும் நகராட்சிப்பகுதிகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தொடர்ந்து ஒளிப்பரப்பு செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி அனைத்து மழலையர் மற்றும் துவக்கப்பள்ளிகள் 31.03.2020 வரை மூடப்படுவதை முதன்மை கல்வி அலுவலர் உறுதி செய்ய வேண்டும். மாவட்டத்திலுள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் விளையாட்டு போட்டிகள், ஆண்டு விழா, சான்றிதழ்கள் வழங்கும் விழா போன்ற நிகழ்ச்சிகளை முற்றிலும் தவிர்த்திட வேண்டும்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பில் அண்டை மாநிலமான கேரள மாநிலத்திலிருந்து வருகை தருகின்ற பேருந்துகள் அனைத்திலும் கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டு, சுகாதாரப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மாவட்டத்தின் எல்லைப்பகுதிகளான குமுளி, கம்பம் மெட்டு, போடி மெட்டு ஆகிய பகுதிகளில் காவல்துறை, சுகாதாரத்துறை மற்றும் வனத்துறை ஆகிய துறை அலுவலர்கள் இணைந்து கவனத்துடன் பணியாற்றிட வேண்டும். கேரள மாநிலங்களிலிருந்து வருகின்ற வாகனங்களில் என்னென்ன பொருட்கள் வருகிறது என்பதை சரிவர கண்காணித்திட வேண்டும். மேலும், ஜீப் போக்குவரத்தை தற்காலிகமாக தடை செய்திடவும், கேரள மாநிலத்திற்கு செல்கின்ற பேருந்துகளின் எண்ணிக்கையை குறைத்திடவும், குறிப்பிட்ட நேரங்களின் அடிப்படையில் மட்டும் இயங்கிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும், மாவட்டத்தின் சில பகுதிகளில் தொக்கம் எடுத்தல், உறிஞ்சி எடுத்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்று வருவதை உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு, அதன் மூலம் தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். தனியார் பேருந்துகள், பள்ளி வாகனங்கள், தனியார் சொகுசு பேருந்துகள், தனியார் கனரக வாகனங்கள், சுற்றுலா வாகனங்கள், ஆட்டோக்கள் உள்ளிட்டவைகளில் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு, கிருமி நாசினி தெளிக்கப்பட்டு, தூய்மையாக பராமரிக்கப்படுவதை வட்டார போக்குவரத்து அலுவலர் தொடர்ந்து கண்காணித்திட வேண்டும். உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட பல்லவாரயன்பட்டியில் வருகின்ற 22.03.2020 அன்று நடைபெறவிருந்த ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி தற்சமயம் தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும், ஜல்லிக்கட்டு நடைபெறவுள்ள தேதி பின்னர் முறையாக அறிவிக்கப்படும்.

சுகாதாரத்துறை அலுவலர்கள் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் போதுமான மருத்துவ வசதி, மருத்துவ உபகரணங்கள், மருத்துவர்கள் இருப்பு, பணியாளர்கள் இருப்பு ஆகியவைகளை சரிவர கண்காணித்திட வேண்டும். அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். நமது மாவட்டத்தில் தற்சமயம் வரை எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

கொரோனா வைரஸ் பாதிப்பு குறித்து ஏதேனும் அறிகுறிகள் தென்படின் பொதுமக்கள் உடனடியாக அரசு மருத்துவமனைகளுக்குச் சென்று மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு, சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். மேலும், அவசர தொலை பேசி எண்ணாக தேனி மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையில் இயங்கி வருகின்ற 104 கட்டணமில்லா தொலைபேசி எண் சேவையும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டும் கட்டுப்பாட்டு அறையில் நிறுவப்பட்டுள்ள 1077 மற்றும் 04546-261093 என்ற அவசர தொலைபேசி எண்ணையும் தொடர்பு கொண்டு, தகவல் தெரிவித்திடலாம். பொதுமக்கள் மருத்துவர்களின் ஆலோசனையின்றி எந்த ஒரு மருந்தகங்களிலும் தன்னிச்சையாக மருந்துகள் வாங்க கூடாது. மருந்தகங்களின் உரிமையாளர்களும் மருத்துவர்களின் மருந்து சீட்டு இல்லாமல் பொதுமக்களுக்கு மருந்துகள் வழங்கிட கூடாது.

மேற்கண்ட பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்கள், அரசின் அறிவுறுத்தலின்படி தினசரி அறிக்கையினை மாவட்ட நிர்வாகத்திற்கு சமர்ப்பித்திட வேண்டும். நோய் கண்காணிப்புப் பணிகள் மற்றும் தூய்மைப்படுத்தும் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்கள் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும். கொரோனா வைரஸ் குறித்து பொதுமக்களிடம் தவறான வதந்திகளை பரப்பி வருபவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, தேனி அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையின் முதல்வர் மரு.ராஜேந்திரன், பெரியகுளம் சார் ஆட்சியர் செல்வி டி.சிநேகா, உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) முத்தையன் உட்பட அனைத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***